1992 ஏப்ரல் 27]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையப்பட்டி ஒன்றியம், குமஸ்தம்பட்டியில் பள்ளியில் சேரக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவு என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தகவல் தந்திருக்கிற காரணத்தால், இதை மேலும் பரிசீலிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 645, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

645—

பனைமரம் தொடர்பான தொழிற்சாலை அமைத்தல்

*4187 டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழில் துறையில் பின்தங்கிய சங்ககிரி தொகுதிக்குட்பட்ட எலச்சிபாளையம், மல்லசமுத்திரம் ஆகிய ஒன்றியங்களில் பனைமர தொழிலாளர்கள் அதிகம் இருப்பதால் அது தொடர்பான தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரம் மற்றும் எலச்சிபாளையம் ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும், 10 பஞ்சாயத்திற்கு மேற்பட்ட 11 கிராமங்கள், பனைமரத் தொழிலாளர்கள் நிறைந்த கிராமங்களாக இருக்கின்றன. சுமார் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பனைமரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு மலர அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் மற்றும் எலச்சி

பாளையம் ஒன்றியங்களில் 5,103 உறுப்பினர்களைக் கொண்ட, 28 ஆரம்ப வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே, அங்கே உள்ள பனைத் தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு, ஒவ்வொரு தனி நபருக்கும் 2,500 ரூபாய் வீதம் கடன் வழங்கப் பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரங்களுக்கு தனிசிறப்பு சேர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தனி நபர்களுக்கு என்று நிதி உதவி ஒதுக்கிக் கொடுத்தாலும், பொது வாக அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தால், ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பனைமரத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழகத்திலே பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற நமது ஒப்பற்ற முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பனை வாரியம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளார்கள். எனவே அதற்குரிய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு பனை வாரியம் அமைக்கின்ற பணி முடிகிறபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 646, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

646—

சென்னையிலிருந்து மெக்காவிற்குச் செல்ல கப்பல் போக்கு வரத்து.

*5726 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழக முஸ்லீம் மக்களுக்கு சென்னையிலிருந்து நேரடியாக புனித மெக்காவுக்குச் சென்றுவர கப்பல் போக்குவரத்து ஒன்றினைத் துவங்கிட அரசு முன்வருமா ?